2003 மே 8]

பகுதியிலே இயக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை திருப்தி அளிக்கவில்லை என்று சொன்னால், இன்னும் புதிய பேருந்துகள் வாங்குகின்றபோது அந்த வழித்தடத்தில் புதிய பேருந்துகள் விடுவதற்கு அரசு பரிவுடன் சிந்திக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 407, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.*

407—

சர்க்கரை ஆலை

***3976—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியில் சிறிய சர்க்கரை ஆலை அமைத்துத் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியில் சிறிய சர்க்கரை ஆலை அமைக்க உத்தேசம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குளத்தூர் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைக்கப்படும் உத்தேசம் இல்லை என்று பதிலுரையிலே கூறியிருக்கின்றார்கள். ஆனால் குளத்தூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. மக்களுக்கு வேலைவாய்ப்பு தரக்கூடிய பெரிய ஆலைகளோ, தொழிற்சாலைகளோ எதுவுமே இல்லை. மக்கள் வேலைவாய்ப்புக்காக வெளியூர் சென்று பிழைத்து வருகின்றார்கள். குளத்தூர் தொகுதியில் அன்னவாசல், குன்றாண்டார் கோயில், விராலிமலை ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கி உள்ளன.

இவற்றில் குன்றாண்டார் கோயில், அன்னவாசல் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் கரும்பு அதிகமாக பயிரிடப்பட்டு வருகின்றது. எனவே குளத்தூர் தொகுதி மக்களின் நலன் கருதியும், கரும்பு விவசாயிகளின் நலன் கருதியும் தமிழக மக்களின் நலன் காத்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில் கனிவோடு மறுபரிசீலனை செய்து, அடுத்த நிதி ஆண்டிலாவது சர்க்கரை ஆலை அமைக்கப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்தில் நாள் ஒன்றுக்கு 2,000 டன் அரவைத் திறன் கொண்ட புதிய சர்க்கரை ஆலை E.I.D. Parry என்ற தனியார் நிறுவனத்தால் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. இந்தச் சர்க்கரை ஆலையில் முழு அரவைத் திறனுக்கு ஆண்டுக்குத் தேவையான 1,30,000 டன்கள் கரும்பு கிடைப்பதற்கு சிரமமாக இருக்கிறது. இதற்காக சுமார் 15,000 ஏக்கர் நிலத்தில் விளையும் கரும்பு தேவைப்படுகிறது. இந்நிலையில் குளத்தூர் தொகுதியில் சாகுபடியாகும் கரும்பை மட்டுமே வைத்து ஒரு சிறிய சர்க்கரை ஆலை நிறுவ சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறிய ஆலைகூட தொடங்கப்படுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று பதிலுரையிலே கூறியிருக்கின்றார்கள். அடுத்த நிதி ஆண்டிலாவது நிதிநிலைக்கு ஏற்ப குளத்தூர் தொகுதி மக்களின் நலன் கருதி, ஒரு சிறிய சர்க்கரை ஆலையாவது தொடங்கப்பட வேண்டும் என்பதை என்னுடைய பணிவான கோரிக்கையாக வைக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 408, திரு. க. பாரமலை, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.